சார்பு நீதிமன்றம், குளித்தலை

MCOP.NO.72/2020

மனுதாரர் / எதிர்மனுதாரர் **எ.ம.சா.2**வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை - II திருமதி.A.அம்சவள்ளி அவர்களால் 44/1969 பிரிவின்படி 24.03.2026 ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் : | கலைமதி | கிராமம் : | |
| த/பெ : | | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவின் இரண்டாவது எதிர்மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. புலனாய்வு அதிகாரியால் தாக்கல செய்யப்பட்ட அறிக்கை அசல் எ.மா.சா.ஆ.1
2. ஒன்றாம் எதிர்மனுதாரர் வாகனத்தின் பாலிசி நகல் எ.மா.சா.ஆ.2

**மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

விபத்து தேதியன்று பாலிசி அமலில் இருந்தது என்றால் சரிதான். முதல் எதிர்மனுதாரருக்கு சொந்தமான இரு சக்கர வாகனம் பதிவு எண். TN47 AP 5145 என்ற வாகனத்தை அதை ஓட்டியவர் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி பிரகாஷ் மோதி மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக போலிசார் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி விபத்தினால் பிரகாஷ் இறந்து போய்விட்டார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையும் இறுதி அறிக்கையையும் ஓட்டுனர் மணிகண்டன் மீது பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கில் புலனாய்வு அதிகாரியை நாங்கள் நியமனம் செய்தோம் என்றால் சரிதான். ஓட்டுனர் மணிகண்டன் உரிய ஓட்டுனர் உரிமத்துடன் தான் இரு சக்கர வாகனத்தை ஓட்டினார் என்றால் சரியல்ல. மோட்டார் வாகனஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுனர் உரிமம் ஆய்வுக்கு உட்படுத்தவில்லை என்று தான் குறிப்பு உள்ளது என்றால் சரியல்ல. மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுனர் உரிமம் இல்லை என குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. முதல் எதிர்மனுதாரர் இரு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுனர் அதிவேகமாக ஓட்டியதால் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றாலும் முதல் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு முழுமையான காப்பீடு எங்களது நிறுவனத்தில் உள்ளது என்பதாலும் எங்களது நிறுவனம் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புலனாய்வு அதிகாரி எங்கள் நிறுவனத்தால்

நியமிக்கப்பட்டவர் என்பதால் எங்களது நிறுவனத்திற்கு ஆதரவாக அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN

சார்பு நீதிபதி

குளித்தலை.